II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 337 of 2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 13.08.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Manjula | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை—

இந்த வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை எனது பெற்றோர் மற்றும் சகோதரர் மீது தாக்கல் செய்துள்ளேன். 3ம் பிரதிவாதி தினேஷ்பாபு எனது அண்ணன். வழக்கு சொத்துகள் எங்களது தாத்தாவின் சொத்தாகும். 1992ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி என் அப்பாவிற்கு வழக்கு சொத்துகள் கிடைத்தன என்றால் சரிதான். நான் 1/4 பாகம் கோரியுள்ளேன். என் தந்தை 2003ல் வழக்கு சொத்துகளை பொருத்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றால் எனக்குத் தெரியாது. நான் எனது பங்கை பொருத்து அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரியுள்ளேன். எனது வழக்குரையில் 3 மற்றும் 4ம் அட்டவணை சொத்துகளின் எல்லைகள் தவறாக உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. என் தந்தை அவரது பங்கில் 1/4 பங்கை பொருத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளதை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆனது என்னுடைய 1/4 பங்கை பொருத்து செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டுகிறேன். தினேஷ்பாபு கோரியவாறு அவருக்கு உரிய பங்கை ஒதுக்குவதை எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.